ரூ.105 கோடியில் 97 இராஜகோபுரங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன!

இந்த ஆண்டு இறுதிக்குள் 2000 கோயில்களுக்கு குடமுழுக்கு!

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூலை 1- சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பதில் வருமாறு :

கா.அண்ணாதுரை: பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, முசிறி கைலாசநாதர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

ஆம் எனில், எப்போது?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: முசிறி, கைலாசநாதர் திருக்கோயிலில் ஏற்கெனவே 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திருப்பணிகள் நடைபெறுகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள், 2,000 கோயில்கள் குடமுழுக்கு என்ற இலக்கிலே இந்தத் திருக்கோயிலும் உள்ளது. ஆகவே, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் திருக்கோயில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கா.அண்ணாதுரை: தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாடு, கோனூர் நாடு, அம்புநாடு, பாப்பாநாடு, முசுவந்தநாடு என குறிப்பிட்ட எல்லைப் பகுதிகள் இன்றளவும் நாடு என்றே அழைக்கப்படுகிறது. அந்த வகையிலே, முசுவந்தநாட்டிலே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர், தஞ்சை மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய ஒரு பகுதியிலே இன்றைக்கு வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சொந்தமான இந்த கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணிக்கு முழுமையான நிதியை ஒதுக்கி, அதற்கான கட்டுமானப் பணிக்கு உதவியிருக்கிற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு, அந்தப் பகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பட்டுக்கோட்டை தொகுதி, விக்ரமம் ஊராட்சி என்பது ஒரு பெரிய ஊராட்சி. அந்த ஊராட்சிக்குட்பட்ட, தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு இராஜகோபுரம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: அவர் கோரிய அந்த தியாகராஜ சுவாமி திருக்கோயிலினுடைய இராஜகோபுரம் கட்டுகின்ற பணிக்கு, 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயிலுக்கு தொல்லியல் துறையினுடைய அனுமதி பெற்றபிறகு, அதற்கு வரைபடம், மண்டலக் குழு, மாநில ஒப்புதல் பெறவேண்டிய சூழல் இருக்கின்றது. ஆகவே, அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக் கூறுகள் இருப்பின், அத்துடன் உறுப்பினருக்கு வைக்கின்ற வேண்டுகோள் என்னவெனில், அதற்குள்ளாக உபயதாரர் நிதிக்கு யாரையாவது ஏற்பாடு செய்தால், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு, ஒரு புள்ளிவிவரத்தின்படி சொல்ல வேண்டுமென்றால், 97 இராஜகோபுரங்கள் சுமார் 105 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, உறுப்பினருக்கு இராஜகோபுரம் மறுக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் அல்ல. சாத்தியக் கூறுகள் இருந்தால், நிச்சயம் அவர் கோரிய இராஜகோபுரம் கட்டித் தரப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கா.அண்ணாதுரை: பட்டுக்கோட்டை தொகுதி, காசாங்காடு கிராமத்தில் இருக்கிற முத்துமாரியம்மன் கோயிலுக்கு ஒரு குறைந்த மதிப்பீட்டிலான திருமண மண்டபம் கட்டுவதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: காசாங்காடு முத்துமாரியம்மன் கோயில் பிரிவு 49 (1)ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட கோயில். சிறிய கோயில். இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் தொகுதியிலேயே, 8 கிலோ மீட்டர் தூரத்தில் கண்டேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில், 3 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவில், திருமண்டபம் கட்டுகின்ற பணி 70 சதவிகிதம் நிறைவுற்றிருக்கின்றது. இந்த

ஆண்டு இறுதிக்குள் அந்தப் பணியை நிறைவு செய்து, திருமண மண்டபத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர இருக்கின்றோம். அவர் கோரிய இடத்திலும், சாத்தியக் கூறு இருப்பின், உபயதாரர் நிதியின் வாயிலாக, அங்கேயும் திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்வோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்த மூன்று ஆண்டுகளில் 97 திருமண மண்டபங்கள் 305 கோடி ரூபாய் செலவிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

க.கணபதி: மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், 'ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு விளையாட்டுத் திடல்' என்ற அறிவிப்பின்படி, இன்றைக்கு அந்த விளையாட்டுத் திடலை அமைப்பதற்கு இடமில்லாத காரணத்தினால் மதுரவாயல் மார்க சகாயாஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் அந்தத் திடலை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை அதற்காக ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: இந்த ஆட்சி தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் ஏற்பட்ட பிறகு, திருக்கோயில்களினுடைய நிலங்கள் ரூ.6,000 கோடி மதிப்பிற்கு மேலாக மீட்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலங்கள் மறுபயன்பாட்டிற்காக, திருக்கோயிலினு டைய திருப்பணிகளுக்கு உதவிடும் வகையில், பல்வேறு வகைகளில் அந்த இடங்களை பல துறைகளுக்குத் தற்போது வாடகைக்குக் கொடுத்து வருகிறோம். வாடகை கேட்பதற்கு முன்பாக பின்பற்ற வேண்டிய சட்ட விதிகள், அந்தத் துறையின் சார்பில், அவர்கள் இந்த இடம் எங்களுக்குத் தேவை; இதற்குண்டான வாடகையை நாங்கள் செலுத்துகிறோம் என்று குறிப்பிட்டு கருத்துரு அனுப்பினால், அது பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கென்று வருகின்ற போது, அதைத் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஆ. தமிழரசி: என்னுடைய மானாமதுரை தொகுதியில் இளையான்குடி, தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயிலுக்கும், திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலுக்கும் துறையின் சார்பாக நல்ல அறிவிப்புகளைத் தந்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதியில் உள்ள ஆனந்தவல்லியம்மன் கோயில் நூறு ஆண்டுகள் பழமையான கோ யில். அங்கு திருத்தேர் உபயதாரர்களால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு துறையின் சார்பாக நிதியும், அக்கோயிலுக்கான திருப்பணியும் அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: அவர் கோரிய திருத்தேரும், திருப்பணியும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்து க்கொள்ளப்பட்டு, தேவையான நிதியை, பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்டு, உடனடியாக அவரது கோரிக்கை நிறை வேற்றித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சபா. இராஜேந்திரன்: நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டை ஊராட்சியில் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயிலில் உள்ள ஊஞ்சல் மண்டபம் பழுதடைந்து, கடந்த கால ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டது. பணி முடிந்த மூன்றே மாதங்களில் அதன் மேற்கூரை இடிந்து விழுந்துவிட்டது; நான்கு தூண்களும் பழுதடைந்து விட்டன. எனவே, அந்த ஊஞ்சல் மண்டபத்தைப் புதுப்பித்துக் கொடுக்கவும், இந்த பழமைவாய்ந்த கோயிலில் ஒரு திருத்தேர் இல்லை; திருத்தேரை அமைத்துக் கொடுக்கவும், அதேபோல, பண்ருட்டி வட்டம், மேல்காங்கேயன் குப்பம் அங்காளம்மன் கோயிலுக்கு ஓர் இராஜகோபுரம் அமைத்துத் தரவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களாக என்பதை கேட்டு, அமர்கிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: இது போன்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்குத்தான், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழக முதல்வர் அவர்கள் 300 கோடி ரூபாயை அரசு நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். அவர் கோரிய அந்த ஊஞ்சல் மண்டபம் தற்போது தொல்லியல் துறையால் ஆவணப்படுத்துகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிவுற்றவுடன் அந்த மண்டபத்தை சீரமைத்துத் தருவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் மற்றும் ஊஞ்சல் மண்டபங்கள் போன்றவைகள் நிச்சயமாக பணியில் எடுத்துக் கொண்டு, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தப் பணிகள் துவங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார்.

போராடுங்கள்!

சாதியை எதிர்த்து
போராடுங்கள் ; அது
ஜனநாயகத்திற்கு எதிரி
என்பதால் !
மூடநம்பிக்கையை
எதிர்த்துப் போராடுங்கள்;
அது அறிவியலுக்கு எதிரி
என்பதால் !
ஆதிக்கத்தை எதிர்த்துப்
போராடுங்கள்; அது
சுதந்திரம் - சமத்துவம் -
சகோதரத்துவத்திற்கு
எதிரி என்பதால் !

...பேரறிஞர் அண்ணா...

கோயம்பேடு பகுதியில் சர்வதேச விளையாட்டு அரங்கம் அமைத்திடுவீர்!

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை - வணிகர்கள் தொழில் உரிமம் பெற வழிவகை செய்திடுவீர்!

சட்டப் பேரவையில் - கழக உறுப்பினர் விருகம்பாக்கம் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா கோரிக்கை!

சென்னை,ஜூலை.1- சட்டப் பேரவையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய விருகம்பாக்கம் தொகுதி கழக உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, "கோயம்பேடு பகுதியில் சர்வதேச விளையாட்டு அரங்கம் அமைத்திடுவீர்!" - "மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வணிகர்கள் தொழில் உரிமம் பெறுவதற்கு வழி வகை செய்திடுவீர்!" என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார்.

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவாசான் பேரறிஞர் அண்ணா, நூற்றாண்டு நிறைவு செய்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகிய இம்மூவரும் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

வறுமை என்பதே இங்கு இல்லா நிலைமை கொண்ட மகளிர் உரிமை, மாணவர்களுக்கு ஊக்கம், மாற்றுத் திறனாளிகளுக்கு தோழமை, வணிகர்களுக்கு வளர்ச்சி, திருநங்கைகள் வாழ்வில் ஏற்றம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, விவசாயிகள் வாழ்வில் பசுமை என கோடிக்கணக்கான மனங்களை வென்ற 'இந்தியா' கூட்டணியின் கதாநாயகன், 40-க்கு 40-ஐயும் வென்றெடுத்த இந்தியாவின் No.1 முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, சக சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் இளைய உதயம், இனிய இதயம், தீராத கொள்கைப் பற்றும், தீராத உறுதியும், துராத ஆர்வமும் மிக்க சின்னவரே! ஒரு கல் கொண்டு, சனாதனக் கண்ணாடியை நொறுக்கிய தீரரே! ஆற்றலின் கடலே! கொள்கையின் பாடலே! புதுமையின் தேடலே! எங்கள் திராவிட மாடலே! தங்களையும் வணங்குகிறேன். என் அரசியல் தந்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தென்சென்னைப் பகுதியில் அக்கா திரு மதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த விருகம்பாக்கம் சொந்தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, உணவுத் துறை, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த அரசு கொறடா அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19-9-2007 அன்று தென்னாப்பிரிக்கா Kingsmead மைதானத்தில் T20 போட்டியில், இங்கிலாந்து வீரர் வீசிய 6 பந்தையும், இந்திய வீரர் யுவராஜ் சிங் கிரிக்கெட் ground-ல் sixer அடித்து அசத்தினார். இந்த அரசியல் களத்தில், 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி, 2021 ஆம் ஆண்டு நகர்ப்புற தேர்தல் வெற்றி, 2022 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தல் வெற்றி, 2022 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் வெற்றி, 2023 ஆம் ஆண்டு இடைத் தேர்தல் வெற்றி, 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றி, அனைத்தையும், கழகத்தின் இளைஞர் அணித் தலைவர், தீவிர எழுச்சியான பிரச்சாரத்தின்மூலம் தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வெற்றி கண்டது நமது இயக்கம். 'Your future is here' என்ற இந்தத் துறைக்கு இளம் தலைவர் ஒரு சிறப்பான பெயர் சூட்டியிருக்கிறார். 2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட காலத்தில், முன்னாள் முதலமைச்சர் நவீன தமிழகத்தின் சிற்பி ஐயா கலைஞர் அவர்கள் இளைஞர்களின் ஆற்றலையும், உடல் வலிமையையும், நம்பிக்கையையும் எதிர்கொள்ளும் வகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையை அன்று உருவாக்கினார்.

உச்சி முகர்ந்து பாராட்டியிருப்பார்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நாம் எல்லோரும் பெரிய தீர்க்கதரிசி என்று சொல்வேம். அவருக்கு அன்றே தெரியுமோ! டிசம்பர் மாதம் 2022-ல் தமது பேரன் இத்துறைக்கு அமைச்சராக வருவார் என்று, இந்தியா அளவில் இந்தத் துறையை தமிழகத்திற்கு உயர்த்தித் தருவார் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2001-ல் இந்தத் துறையை உருவாக்கியிருக்கிறார். அதுமட்டுமல்ல, இன்று நம் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்திருந்தால் நம் இளந் தலைவர் அவர்களை உச்சிமுகர்ந்து பாராட்டியிருப்பார். இந்தத் துறை இன்று இந்தியாவில் Number 1 துறையாக இருந்து கொண்டிருக்கிறது. அது எப்படி என்ற சில குறிப்புகளை இந்த அவையில் வைக்கிறேன். Khelo India (Khelo India Youth Games 2023), Squash World Cup, Tamil Nadu Champions Trophy, CM Trophy, Asia Hockey Championship (2023 Men's Asian Champions Trophy), Kalaignar Sports kit (Tamil Nadu Kalaignar Sports Kit Scheme), Olympic பயிற்சி என்று பல திட்டங்களை இந்தத் துறை இளைஞர் சமுதாயத்திற்கு தந்துகொண்டிருக்கிறது.

விளையாட்டின் தலைநகரம் தமிழ்நாடு!

தமிழ்நாட்டு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால், நமது இளம்தலைவர் அவர்களின் ஓய்வின்றி உழைப்பால் சர்வதேச போட்டிகள், தேசிய போட்டிகள் வெற்றிக்கு அடித்தளமாக தமிழ்நாடு இன்று இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக மாறிக்கொண்டு வருகிறது. இன்று முதலமைச்சர் கோப்பையைப் பொறுத்த வரையில், கூடைப்பந்து, இறகுப் பந்து, கால்பந்து, வலைக்கோல் பந்து மேசைப் பந்து, மட்டைப்பந்து, கைப் பந்து, கடற்கரை கைப்பந்து, தடகளம், சதுரங்கம், கபடி, சிலம்பம், பளுதூக்குதல் என்று 15 போட்டிகள் இப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆட்சிகாலத்தில் வெறும் பெயரளவில் மட்டும் 10 போட்டிகள் நடைபெற்றன. இன்று இளம் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 15 போட்டிகள் நடத்தப்பட்டு, இளைஞர்களின் ஊக்கத்தைப் பெற்று, இன்றைக்கு பல இளைஞர்கள் தடம் மாறி செல்லாமல் முன்னோக்குப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு காரணம் நம்முடைய இளம் தலைவர் என்பதை பெருமையோடு இந்த அவையில் நாங்கள் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ்நாடு, இந்த இடத்திற்கு வருவதற்கு காரணமாக இருந்த Tamil Nadu Champions Trophy-யில் 4,57,403 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். இந்தப் போட்டியில் பங்கேற்றவர்கள், 3,71,351 நபர்கள். இன்னும் பெருமையோடு

சொல்ல வேண்டும் என்று சொன்னால் 4,471 மாற்றத் திறனாளிகளுக்கு அங்கீகாரம் தந்தவர்தான் நம் இளம் தலைவர் அவர்கள்.

வீரர்களுக்கு அங்கீகாரம்!

அதுமட்டுமல்ல; வரக்கூடிய போட்டியாளர்களுக்கு தரமான உணவு, நட்சத்திர வசதியோடு தங்கும் விடுதி, எப்படி IPL கிரிக்கெட் போட்டிகளில் கிரிக்கெட் வீரர்களை வாகனங்களில் அழைத்து சென்று மரியாதை செலுத்துவார்களோ, அந்தவகையில் தமிழ்நாட்டிலிருந்து வந்த 3,71,000 வீரர்களை அங்கீகாரம் செய்தவர்தான் இளம் தலைவர். இதுமட்டுமல்ல. கடந்த காலங்களில் வெறும் வீரர், வீராங்கனைகள் மட்டும்தான் பங்கேற்றனர். இப்போது கல்லூரி பிரிவு, பொது பிரிவு, அரசு ஊழியர்கள் பிரிவு என்று பல உள்ளடக்கு பிரிவுகளை உருவாக்கித் தந்தவர் தான் நம் இளம் தலைவர் அவர்கள். இதற்காக கடந்த ஆட்சிக் காலங்களில் ரூ.50 கோடி, ரூ.47 கோடிதான் ஒதுக்கப்பட்டது. 2022-2023-ல் 65 கோடி ரூபாயும், 2023-2024-ல் 66 கோடி ரூபாயும் ஒதுக்கி இந்தத் துறையின் வளர்ச்சி விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. இந்த ஆண்டு ரூ.418 கோடியை ஒதுக்கி இளைஞர்களுக்கு மிகப்பெரிய ஊன்றுகோல் சக்தியாக இந்தத் துறை திகழ்ந்து கொண்டிருக்கிறது. TamilNadu Champions Foundation என்ற ஒரு திட்டத்தை நம் இளம் தலைவர் அவர்கள் உருவாக்கினார்கள். எதற்காக உருவாக்கினார்.

கிராமப்புறம் மற்றும் நகரங்களிலிருந்து வரக்கூடிய இளைஞர்கள் யாரை பார்ப்பது தனக்குள்ளிருக்கும் திறமையை எப்படி வெளிப்படுத்துவது என்று திக்குமுக்காடிக் கொண்டிருந்த தருணம் அந்தத் தருணம், அவர்களுக்கேற்ப TamilNadu Champions Foundation என்ற ஒரு துறையை உருவாக்கி நமது முதல்வர் அவர்கள், தொட்டதெல்லாம் துலங்கும் கைக்கு சொந்தக்காரர் அவர்மூலம் 5 இலட்சம் ரூபாய் நிதியைப் பெற்று, இன்று பல CSR fund-களை பெற்று இன்றைக்கு TamilNadu Champions Foundation-ல் 28 கோடி ரூபாய் நிதியை வைத்து, நிதியை மட்டும் சும்மா வைத்துக்கொள்ளவில்லை. வரக்கூடிய இளைஞர்களை ஊக்கப்படுத்தும் திட்டமாக TamilNadu Champions Foundation-ஐ இது வரை 76 சதவிகித இளைஞர்கள் அதைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டம்!

அதுமட்டுமல்ல; கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் என்ற ஒரு திட்டதை உருவாக்கி, கிராமப்புற இளைஞர்களுக்கு பல திட்டங்கள் போய்ச் சேர வேண்டும். அங்குள்ள இளைஞர்கள் விளையாடுவதற்கு ஆசையாக இருப்பார்கள். அவர்களுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கு கூட பண பொருளாதாரம் இருக்காது. அதை உணர்ந்த நம் இளம் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி Cricket, Football, Volleyball, Throwball, Kabaddi, Chess, Shuttle ஆகிய அனைத்துப் போட்டிகளுக்கும் அவரே நேரடியாக மதுரையில் சென்று கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டம் என்ற திட்டத்தைத் தொடங்கி, இன்று கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டம் கிராமம் வரை சென்றிருக்கிறது என்று சொன்னால், இந்தத் துறை எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதற்கு இந்தத் திட்டம் ஓர் உதாரணமாகும்.

அதுமட்டுமல்ல, போட்டியில் பங்கேற்கக்கூடியவர்களுக்கு அரசு வேலையில் 3 சதவீத இட ஒதுக்கீடு இருக்கிறது என்று சொன்னார்கள். கடந்த காலங்களில் அது செயல்பாட்டில் இல்லாமல் கிடப்பில் இருந்தது. இன்று நம் இளம் தலைவர் பொறுப்பேற்ற பிறகு, 17 பேருக்கு அரசு வேலை கொடுத்திருக்கிறார்கள். எதிர்வருங்காலங்களில், நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டை சரியான வகையில் தருவார் என்ற நம்பிக்கையில் இளைஞர்கள் இந்த போட்டிகளில் அதிகமாக பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பாரா ஒலிம்பிக் போட்டியில் போட்டியிட்டு வென்ற மாரியப்பனுக்கு ரூபாய் 75 இலட்சம் ரொக்கப் பரிசும், அரசு வேலையும் தந்தார்கள். செஸ் போட்டியில் போட்டியிட்ட குகேஷ் அவர்களுக்கு 75 இலட்ச ரூபாய் ரொக்கப்பரிசு தந்தார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஓராண்டுகாலத்தில் 1057 பேர் பங்கேற்று ஏறக்குறைய 40 கோடி ரூபாயை தந்தவர்தான் நம்முடைய இளம் தலைவர் அவர்கள்.

உலகத்தரத்தில் உயரும் அரங்கம்!

இன்று நமது சென்னையில் இருக்கக்கூடிய நேரு உள்விளையாட்டு அரங்கம், Mayor Radhakrishnan விளையாட்டரங்கம், வேளச்சேரி AGB வளாகம் அனைத்தையும் உலகத்தரத்திற்கு உயர்த்திக் கொண்டிருக்கிறார் நம் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். அவர் இருக்கக்கூடிய சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையில் பொருளாதார மேம்பாடு, வேளாண்மை, நீர்வள ஆதாரங்கள், கல்வி, சுகாதாரம், நகர்ப்புற மேம்பாடு, மகளிர் உரிமைத் தொகை, நான் முதல்வன், TN Skills, நான் முதல்வன் mentorship என்று பல துறைகள் இருக்கிறது. இதில் குறிப்பாக, மகளிர் உரிமைத் தொகையில் ஒரு செய்தியை மட்டும் இங்கு பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். நான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, தொகுதியிலுள்ள வாக்காளர்களைச் சந்தித்து, வாக்குகளை கேட்டுக் கொண்டிருந்த தருணம், அந்த நேரத்தில் ஒரு மகளிர் வீட்டு வெளியில் வந்து சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது)

தாயுள்ளம் கொண்ட முதல்வர்!

எனக்கு திருமணமாகி 17 வருடங்களாகிறது. நான் மஞ்சள் கயிறுதான் இதுவரை போட்டுக்கொண்டிருந்தேன். முதலமைச்சர் கொடுத்த அந்த ஆயிரம் ரூபாயை மிச்சப்படுத்தி, மிச்சப்படுத்தி, 17 வருடங்கள் கழித்து, இந்த மஞ்சள் கயிற்றில் தாலி தங்கத்தோடு இருக்கிறது என்று சொன்னால் அதற்கு இந்த மகான் தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர்தான் காரணம். அவருக்கு இந்தத் தருணத்தில் அந்த மகளிர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தத் திட்டத்தின்மூலம் அங்கிருந்த இன்னொரு பெண்மணி சொன்னார்கள். என்னுடைய குழந்தைகளுக்கு இரண்டு பேருக்கும் 500 ரூபாய், 500 ரூபாய் என கொடுத்து, tuition fees கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று சொல்வார்கள். அன்று நேரில் இந்த சட்டமன்ற உறுப்பினருக்கு வாய்ப்பு தந்தவர், மகளிர் உரிமைத் தொகை என்ற திட்டத்தை தந்து, இந்தியாவில் ஒரு சிறப்பு வாய்ந்த ஒரு முதலமைச்சர் நமது முதலமைச்சர் என்று அன்று களத்தில் சந்தித்தோம். அதுமட்டுமல்ல, ஒரு சில குறைகளும் சொன்னார்கள். எங்கள் தெருவில் 37 பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வரவில்லை என்று சொன்னார்கள். நாங்களும் உடனடியாக அதிகாரிகளை அழைத்து அங்கு சென்று ஆய்வு செய்து, இன்று தேர்தல் முடிந்த பிறகு report வாங்கினோம். அதில் என்ன உண்மை வந்திருக்கிறது என்றால், 37 பேரில் 26 பேருக்கு கிடைக்கிறது. 11 பேருக்கு தான் கிடைக்கவில்லை. அந்த 26 பேரும் தன்னுடைய கணவர்களுக்கு தெரியாமல் சேமிப்பு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டம் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் சென்றடைந்திருக்கிறது என்பதற்கு—இந்த திட்டம் மிகச்சிறப்பாக இருக்கிறது. விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோயம்பேடு பேருந்து நிலையம் தற்போது கிளாம்பாக்கத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் சர்வதேச அளவிலான ஒரு விளையாட்டு அரங்கத்தைத் தர வேண்டும். கலைஞர் நகரில் இருக்கக்கூடிய உணவுப் பொருள் கிடங்கு மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதை நவீனமயமாக்க வேண்டும். கலைஞர் நகரிலுள்ள கூட்டுறவுக்கு சொந்தமான இடத்தில் சட்டமன்ற தொகுதிக்கென்று ஒரு அலுவலகம் இல்லை. அதையும் அங்கு அமைத்துத் தர வேண்டும்.

வணிகர்களுக்கு இந்த லைசென்ஸ் பிரச்சினை மோசமான நிலைமையில் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் அதை முறையாக பதிவு செய்வதற்கு கஷ்டப்படுகிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையாக கொண்டு வருகிறேன் என்றிருக்கிறார். வணிகர்களுக்கு பல திட்டங்களைத் தந்துகொண்டிருக்கக்கூடிய தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர், அந்த ஒரு வருட லைசென்ஸ் முறையை மூன்று வருடமாக மாற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் 23 கோரிக்கைகள் இருக்கின்றன. இரண்டே இரண்டு முக்கியமான கோரிக்கைகளை மட்டும் சொல்லி, விடைபெற விரும்புகிறேன். புதிய குடியிருப்புகள் slum பகுதிகளில் பார்த்தீர்களென்றால் 41 வருடங்களாக தலைவர் கலைஞர் அவர்கள் குடிசை மாற்று வாரியம் என்று திட்டம் கொண்டுவந்து, இன்று அது பெருமைப்படக்கூடிய வகையில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 40 வருடங்களாக இருக்கக்கூடிய ராணி நகர், சிவலிங்கபுரம் குடியிருப்பு கட்டித்தர வேண்டும். ஒவ்வொரு பருவமழைக் காலங்களிலும் அடையார் ஆற்றங்கரையில் இருக்கக்கூடிய மக்கள் மழை வெள்ள உபரி தண்ணீர்